OS  124/2017

Date:16.12.2024

Name:  உதயகுமார் (pw3)

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு **2** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:

எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை. வழக்கு நடந்துவரும் விபரம் பற்றி வாதி நவீன் குமார் சொன்னார். இப்பொழுதும் என்னுடன் வாதி வந்திருக்கிறார் என்றால் நான் தனியாக வந்தேன். இந்த வழக்கின் 2 வது பிரதிவாதி ரமேஷ் என்பவர் மீது ஒரு குற்றவியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி மீது நான் காசோலை வழக்கு ஒன்றை மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் தாக்கல் செய்துள்ளேன். நவீன்குமார் என்பவபருக்கு இந்த வழக்கின் 1 வது பிரதிவாதி அப்பா முறையாவார். வாதியின் மூலமாக மனோகரன் என்பவரை தெரியும். முதல் பிரதிவாதி விலாசம் எனக்கு தெரியாது. நவீன்குமார் விலாசமும் எனக்கு தெரியாது. நவீன்குமர் என்பவரை எனக்கு எவ்வளவு நாள் தெரியும் என்றால் அவர் பள்ளி படிக்கும்போதே நவீன்குமாரை தெரியும் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக தெரியும். நவீன்குமார் செங்கல் வியாபாரம் செய்துவருகிறார் எவ்வளவு காலமாக செய்துவருகிறார் என்று தெரியாது. நவீன்குமாரின் தந்தை காவலராக இருக்கிறார். நவீன்குமார் எவரஸ்டு நிதி நிறுவனத்தில் கூட்டாளி என்றால் எனக்கு தெரியாது.

தாவா சொத்திற்குண்டான ஒப்பந்தம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு எவ்வளவு விஸ்திரணம் ஒப்பந்தம் செய்யப்பட்டது என்ற விபரம் தெரியாது. தாவா சொத்து என்ன சர்வே எண் என்று தெரியாது. எந்த தொகைக்கு ஒப்பந்தம் ஏற்பட்டது என்ற விபரம் தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 3 ல் நவீன்குமார் மனோகரனுக்கு ரூ.8,00,000/ ரூ.10,00,000 கொடுத்ததாக கூறியுள்ளேன். நான் சாட்சி கையொப்பம் செய்யும்போது யார் உடனிருந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. ஒப்பந்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. சர்ர்பதிவாளர் அலுவலகத்தில் வைத்துதான் மேலெழுத்து செய்யப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்தில்தான் பணபரிவர்தனை நடந்தது. ஏற்கனவே இந்த வழக்கில் முதல் பிரதிவாதி மற்றும் இரண்டாம் பிரதிவாதிக்கு என்ன கொடுத்தல் வாங்கல் என்று எனக்கு தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 3 ல் பணம் பட்டுவடா செய்யப்பட்டது மனோகரனுக்கு மட்டும்தான் என்று தெரியும் உரிமையாளருக்குபோய் சேர்ந்ததா என்று எனக்கு தெரியாது. 2015 ம் ஆண்டு ஒரு தொகையும் மற்றும் 2016 ஆண்டு ஒரு தொகையும் கொடுக்கப்பட்டது. 2015 ம் ஆண்டு ரூ.10,00,000/-மும் 2016 ம் ஆண்டு ரூ.8,50,000/ பணம் கொடுக்கப்பட்டது. மேலெழுத்து செய்யும்போது உடனிருந்தவர்கள் யார் யார் என்று எனக்கு ஞாபகமில்லை. குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து ஒப்பந்தம் மற்றும் பணபரிவர்தனை நடந்தது. எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் குடியாத்தத்தை சேர்ந்தவர் என்று அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த காசோலை வழக்கு 2016 ம் ஆண்டு அந்த வழக்கு எண் எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கு ஆண்டு பட்டிகை வழக்கு எண்.188/2018 என்றால் எனக்கு ஞாபகமில்லை வழக்கறிஞருக்குதான் தெரியும். என் தரப்பில் குடியாத்தம் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்த மனுவின் நகல் என்முன் காட்டப்படுவதுதான் அது பி.வா.சா.ஆ.5 ஆகும். நான் பழிவாங்கும் நோக்கத்துடன் நவீன்குமாருக்கு ஆதரவாக தவறான சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. நவீன்குமாருக்கும் மனோகருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி தெரிந்ததால்தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். எவரஸ்ட் நிதி நிறுவனத்தில் நான் ஊழியராக இருந்தேன் என்றால் இல்லை. எங்கள் எல்லோருடைய வஞ்சக கூட்டு முயற்சியாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமான ஆவணங்கள் எங்கு உள்ளது என்று எனக்கு ஞாபகமில்லை.

(மறுவிசாரணை இல்லை)